Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 35

## கம்பராமாயணத்தில் அறிவியல்

***முனைவர் சி. பரமேஸ்வரி***
*உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,*
*அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி -3.*
*மின்னஞ்சல்: parameswaric699@gmail.com*

கம்பராமாயணம் கிட்கிந்தா காண்டம் வாலிவதைப் படலத்தில், வாலியைக் கொன்று வானரப் படைகளை ஒன்றுசேர்த்து சீதையின் இருப்பிடத்தை அறிவது தக்கதென்று அனுமன் கூற இராமன் இசைகிறான். இராமன் சுக்கிரீவனை நோக்கி, 'நீ வாலியைப் போருக்கு அழைத்து வந்து அவனோடு பொருதிய நிலையில் யான் மறைந்து நின்று வாலி மேல் அம்பு எய்து கொல்வது தக்கதென்று கருதுகின்றேன் என்கிறான். சுக்கிரீவனும் அதற்கிசைகிறான். வாலியும் சுக்கிரீவனும் கடும்போர் புரிகின்றனர். முடிவில் சுக்கிரீவன் வாலியொடு நிற்கலாற்றாது வருந்திய நிலையில் இராமனை அடைகிறான். சுக்கிரீவனின் துயர்நிலைக்கு இரங்கிய இராமன், அவனை நோக்கி நீ வருந்தாதே, நீயும் வாலியும் உருவத்தாலும் நிறத்தாலும் ஒத்த தோற்றமுடையவராக இருத்தலால் வாலியைத் தெரிந்து அவன்மீது அம்பு எய்ய முடியாமல் போயிற்று. நீ கொடிப்பூ மாலையை அடையாளமாகr; சூடிச் செல்க என்று கூற, சுக்கிரீவனும் அவ்வடையாள மாலையைச் சூடிச் சென்று வாலியுடன் கடும்போர் புரிகிறான். வாலி> சுக்கிரீவனை நிலத்தில் மோதிக் கொல்லுதற்கு மேலே தூக்கிய போது இராமன், அம்பு எய்திய நிலையில் வாலியின் மார்பில் mk;G தைத்தது. தன்மீது அம்பு எய்தியவன் இராமன் என்பதை அறிந்த நிலையில் நிலைபெற்ற அறத்தின் வேலியை அழித்துவிட்டாயென்று வெகுண்டு பேசுகிறான்.

பிறகு இராமன், வாலியிடம் நின் தம்பி சுக்கிரீவனின் மனைவியை வலிதிற் கவர்தலாகியä; தீச்செயலைச் செய்யத் துணிந்தமையாலும் நின்னால் துன்புறுத்தப்பட்டு என்னைத் தஞ்சமடைந்து உயிர்போலும் நட்பிdd; ஆயினமையாலும் உன்னைக் கொன்று உயிர்கவர்ந்தேன் என்று கூறும் நிலைகளில் பல்வேறு அறக்கருத்துகள் இடம்பெற்றுள்ளன. இவற்றைப் பற்றி அறிவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

# அறம்

அறமானது தனிமனித நடத்தையையும் ஒழுகலாற்றையும் கடந்து வாழ்வியல் நெறியாகத் திகழக்கூடியது. “ ‘அறம் ஒருவகை வாழ்க்கை நெறி’ எனக் கூறலாம். அதாவது மனித வாழ்க்கை செம்மையுடையதாகவும், அமைதியுடையதாகவும், பயனுடையதாகவும் அமைவதற்கு ஆன்றோர்கள் காட்டிய, அன்றாட வாழ்f;கையில் பின்பற்றப்படுவதற்குரிய மெய்ம்மை நெறி ” [1]. மேலும் “ ‘அறம்’ என்னும் சொல்லிற்குரிய நேரான பொருள், ‘அறுத்துச் செல்வது’, ‘வழியை உண்டாக்குவது’ என்பவையாகும். மனித இனத்தின் நலத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், மனித சமுதாயம் வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறியே, அறம்’ என்பது இதனால் பெறப்படுகிறது”[2].

# தீமை நன்மையாகாது

மறைந்திருந்து தன்மீது அம்பு எய்தியவன் இராமன் என்பதை அறிந்த நிலையில் வாலி, இராமனிடம் பிறரைத் தீமை செய்யாது தடுத்துக் காத்து, பிறகு தானே அச்செயலைச் செய்யும்பொழுது தீங்கற்ற நன்மையாய் மாறும் இயல்பினதோ என்று வினவுகிறான்.

“ தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தாற் றீங்கன் றாமோ” ( கிட்கிந். வாலிவதை. 76 : 3)

என்பதில் தீமை செய்யாதபடி பிறரைத் தடுத்துக் காக்கும் கடமை மேற்கொண்டவர்கள், தாமே அத்தீமையைச் செய்யுமிடத்து அத்தீச்செயல், தகுதி மிக்கோரால் செய்யபட்டமை கருதித் தீங்கில்லாத நன்மையாய் மாறிவிடாது என்பது உணர்த்தப்படுகிறது.

# இடுக்கண் தீராப் பழியைத் தரும்

வாலி, இராமனிடம் உயிரினும் சிறந்ததாகப் பேணக்கூடியது ஒழுக்கம். அவ்வொழுக்கத்தால் பெறத்தக்க சிறப்பு வலிமையில்லாத மெலியோரிடத்து அமைதலில்லை. வலிமையுடையோர் தம்மின் மெலியாரைத்

துன்புறுத்துபவராயின் அத்தீச்செயலால் அவ்வலியோருக்குப் புகழ் உண்டாகி பழி இல்லாமல் போய்விடுமா என்று வினவுவதை,

"வொழுக்கமும் விழுப்பந் தானும் வலியவர் மெலிவு செய்தாற் புகழன்றி வசையு முண்டோ" (கிட்கிந் .வாலிவதை.80 : 3 - 4)

என்பதால் பெறப்படும். ஒழுக்கத்தின் உயர்வினை உணர்ந்து அதனை உயிரினும் சிறந்ததாகக் கடைப்பிடித்தொழுகக் கூடியோர் வலியோர். ஒழுக்கமும் விழுப்பமும் வலியற்ற மெலியவர் மட்டும் கடைபிடித்தற்குரியன என எண்ணி, அவற்றைக் கைநெகிழ விடுதல் அறமாகாது. ஒழுக்கமும் விழுப்பமும் மெலியவர்,வலியவர் என்னும் வேறுபாடின்றி அனைவராலும் போற்றப்பட வேண்டும். வண்மையுடையோர் தம்மால் பேணத்தகும் அறத்தினை மதிக்காமல் மெலியோருக்கு இடுக்கண் விளைவித்தால் அச்செயல் அவரது ஆற்றலைப் புலப்படுத்தும் புகழாகக் கருதப்படாமல் தீராப் பழியைத் தரும்.

## பிறன்மனை நோக்காப் பேராண்மை

வாலி கூறிய குற்றச்சாட்டிற்கு இராமன், அன்பின் வழிப்பட்டதும் நற்குடிப் பிறப்பிற்கு இயைந்ததும் வீரத்தொடு பொருந்தியதும், அறிவு நூல்களைக் கற்றவாறு ஒழுகும் மெய்ம்மையான ஒழுக்க நெறியின் பகுதியாவதுk; வேறு ஒருவன் மணந்த மனைவியை அவளது கற்பு நிலைக்கு இழுக்கு நேராதபடி மதித்துக் காக்கும் பேராண்மையாகும் என்று கூறுகிறான்.

"ஈர மாவது மிற்பிறப் பாவதும்
வீர மாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவது மற்றொரு வன்புணர்
தார மாவது தாங்குந் தருக்கரோ " ( கிட்கிந் வாலிவதை. 99)

என்பதில் பிறன்மனை நோக்காத பேராண்மை அன்பு, நற்குடிப்பிறப்பு, வீரம், கல்வி, நல்லொழுக்கம் ஆகிய எல்லா நலd;களுக்கும் நிலைக்களமாகத் திகழும் என்பது அறியப்படுகிறது.

## தெளிந்த நல்லறிவு

இராமன் வாலியிடம், தெளிந்த நல்லறிவுடைய பெரியோர்களுக்கு இனிது விளங்கக் கூடியது வீரத்தின் வலவுதலாவது, 'யாம் வன்மையுடையோம்' என்று எண்ணி மனம் அறத்திற்குப் புறம்பான தீய வழியில் சென்று தன்னின் மெலியராகிய எளியோரை வெFண்டு துன்புறுத்தல். அறநெறியினின்றும் வழுவுதலாவது, நிறையென்னும் அரிய காவலையுடைய கற்புடைய மகளிர் திறத்து முறைகேடாக நடத்தலாகும் என்று கூறுகிறான்.

"மறந்தி றம்பல் வலிய மெனாமனம்
புறந்தி றம்ப வெளியவர்ப் பொங்குதல்
அறந்தி றம்ப yருங்கடி மங்கையர்
திறந்தி றம்ப றெளிவுடை யோர்க்கெலாம்"(கிட்கிந் வாலிவதை.100)

இதில் தன்னின் மெலியராகிய எளியோரை வெகுண்டு துன்புறுத்தல் வீரத்தின் வழுவிய செயல். பிறன் மனைவியை நயத்தல் அறத்தின் வழுவிய செயல். இவை வீரத்தின் உண்மையியல்பையும் அறத்தின் தன்மையையும் உள்ளவாறுணர்ந்த தெளிந்த நல்லறிவினர்க்கு இனிது விளங்கும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

அறத்தின் இயல்பு

இராமன், வாலியிடம் நின் தம்பி சுக்கிரீவனின் ஆருயிர் மனைவியை வலிதிற்கொண்ட தீச்செயல் நின்னுடைய பெருமையை நீங்குமாறு செய்துவிட்டதென்று இரங்குகிறான். அந்நிலையில் அறமாவது இத்தன்மையுடையது என்னும் தகுதியையும் இம்மை, மறுமையென்னும் இரண்டின் பயன்களையும் தெளிவாக ஆராய்ந்து எண்ணினாயில்லை என்று கூறுகிறான்.

"தரும மின்ன தெறுந்தகைத் தன்மையும்
இருமை யுந்தெரிந் தெண்ணலை யெண்ணினாy"
(கிட்கிந்.வாலிவதை.101:1-2)

இதில் அறத்தின் இயல்பாவது பிறனொருவனுக்கு உரிமை பூண்டொழுகுவாளாகிய பிறன் மனையாளின் பெண்மையை விரும்பாமையாகும். அத்தகைய அறம் இப்பிறப்பில் புகழும் வரும் பிறப்பில் போகம் முதலிய நலன்களும் அளிக்கக்கூடியது. இதற்கு மாறாக பிறன் மனையாளை விரும்புதலாகிய தீச்செயலால் இப்பிறப்பில் பகையும் பழியும் அச்சமும் வரும்பிறப்பில் நரகத் துன்பமும் எய்துவர் என்பது அறியப்படுகிறது.

## எளியோரின் துன்பத்தைப் போக்கல்

இராமன், வாலியிடம் நின்னால் துன்புறுத்தப்பட்டு என்னை; தஞ்சம் அடைந்த சுக்கிரீவன் உயிர் போன்ற நட்பினன். சிறிதும் தொடர்பில்லாத அயலாராயினும் வலிமையுடைய தீயோரால் துன்புறுத்தப்படும் நிலை ஏற்பட்டபோது அவர்க்குற்ற தீங்கினை அறவே நீக்குதல் என் மனதில் கொண்ட குறிக்கோளாகும் என்று கூறுவதை,

“ஏதி லாரு மெளியரென் றாலவர்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ”(கிட்கிந்;.வாலிவதை.102 :3 - 4)

என்பது உணர்த்தும். எத்தகையத் தொடர்பு இல்லாத அயலாராயினும் வலியரால் துன்புறுத்தப்பட்டு எளியராய் அல்லல்பட்ட நிலையில் எளியவர்களின் துன்பத்தைப் போக்குதல் தலையாய குறிக்கோளாகும்.

## நல்லதன் நலனும் தீயதன் தீமையும்

வாலி, தான் குற்றமிலன் எனக் கூறிய மொழிகளை இராமன் மறுத்து அவன் செய்த செயல் குற்றமுடையதென்று கூறுகிறான். எவ்வகைப் பிறப்புகளிலும் அறிவுடைய மாந்தர்கள் தம்மால் செய்யத்தக்கன இவை, செய்யத்தகாதன இவை என்று நன்றும் தீதும் ஒருங்கு வைத்து எண்ணியுணர்தல் வேண்டும். அவ்வாறு எண்ணியுணராவிடின் விலங்கென்று கருதப்படுவர். அவ்விலங்கும் மனவுணர்வினால் மனு நெறியாகிய ஒழுக்க நெறியில் ஒழுகினால் மக்களினும் மேலான உயர்ந்த தேவர்களென்று மதித்துப் போற்றப்பெறுவர் என்று கூறுகிறான்.

“ தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும்புத் தேளிரே“ (கிட்கிந்;.வாலிவதை.112 )

என்பதில் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் ஆகிய இரண்டின் விளைவுகளையும் ஒருசேர எண்ணுதல் வேண்டும். பிறப்பு வகையால் உயர்வுடைய மக்களே எனினும் நல்லொழுக்கமிலராயின் செயல் வகையால் இழிந்த விலங்கினத்துள் வைத்து எண்ணப்படுவர். பிறப்பு வகையால் இழிந்த விலங்காயினும் அவை நன்றும் தீதும் பகுத்துணர்e;தொழுகும் நல்லொழுக்கமுடையனவாயின் செயல் வகையால் மக்களினும் உயர்ந்து வானுறையும் தேவர்களுள் வைத்துப் போற்றப் பெறுவர் என்பதை அறியமுடிகிறது.

எக்குலத்தில் பிறப்பினும் யாவராயினும் அவரவர் செய்யும் நலத் தீங்குகளாகிய வினை காரணமாக உயர்வும் இழிவும் அமையும். அத்தன்மையினைத் தெளிவாக அறிந்திருந்தும் பிறன் மனையாளின் கற்பு மாண்பினைr; சிதைத்தாய் எனத் தான் ஒறுத்தற்குக் காரணமாக வாலி செய்த பெருந்தீங்கினை எடுத்துக் கூWfpwhd; மனுநீதியில் தவறாத இராம.

"இனைய தாதலி னெக்குலத் தியாவர்க்கும்
வினையி னால்வப மேன்மையுங் கீழ்மையும்
அனைய தன்மை யறிந்து மழித்தனை
மனையின் மாட்சியென் றான்மனு நீதியான்" (கிட்கிந்.வாலிவதை.115)

என்பதில் எக்குலத்திலுள்ளோராக இருப்பினும் மேன்மையும் கீழ்மையும் வினையினால் வரும். எனவே எல்லா உயிர்களும் வினைவயத்தால் பஞ்சபூத பரிணாமமாகிய உடம்பினைப் பொருe;jp, வினைப்பயன்களை நுகரும் பிறப்பியல்பால் ஒரு தன்மையன. அவ்வுயிர்கள் இவ்வுலகில் பெறும் பெருமை, சிறுமையாகிய உயர்வு தாழ்வுகளுக்கு அவ்வுயிர்கள் செய்யும் நன்றும் தீதுமாகிய செயல்வகைகள் சிறப்புடைய காரணங்களாகும் என்பதை உணரமுடிகிறது. இக்கருத்தினை,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"(குறள். 972)
"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்"(குறள். 505)

என்னும் வள்ளுவர் வாய்மொழிகளோடு ஒப்புநோக்கத்தக்கன.

## முடிவுரை

இதன்மூலம் எச்செயலாக இருந்தாலும் சிந்தித்துச் செயல்பட வேண்டும். பிறன்மனை நோக்காப் பேராண்மை சிறந்தது. செய்யும் வினைக்கேற்பப் பயனைப் பெற இயலும் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

## தொகுப்புரை

இவ்வாறு கம்பராமாயணம் வாலிவதைப் படலத்தில், தீய செயலானது தகுதி மிக்கோரால் செய்யப்பட்டமை கருதி அத்தீச்செயல் நன்மையாய் மாறிவிடாது.

மெலியோருக்கு இடுக்கண் விளைவித்தால் தீராப் பழியைத் தரும். பிறன்மனை நோக்காப் பேராண்மை அன்பு, நற்குடிப்பிறப்பு, வீரம், கல்வி, நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு நிலைக்களமாகத் திகழும்.

எளியோரை துன்புறுத்தல் வீரத்தின் வழுவிய செயல். பிறன்மனை நயத்தல் அறத்தின் வழுவிய செயல்.

நல்லதன் நலனும் தீயதன் தீமையும் ஒருசேர எண்ணிச் செயல்பட வேண்டும். பெருமை, சிறுமையாகிய உயர்வு தாழ்வுகளுக்கு அவ்வுயிர்கள் செய்யும் நன்றும் தீதுமாகிய செயல்வகைகள் காரணங்களாக அமையும் ஆகிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

## சான்றெண் விளக்கம்


1. கு.பகவதி (ப.ஆ.), திறனாய்வு அணுகுமுறைகள், ப.40., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600113, மறுபதிப்பு: 2007
2. மேலது, ப.40.